(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 130.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 ஒற்றோபர் 20, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0723/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வருடத்திற்கு ஒரு தடவையாயினும் மேதகு சனாதிபதி அவர்கள் ஏற்றுமதிச் சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கியுள்ளாரா என்பதையும்;

(ii) அரசாங்க ஏற்றுமதிக் கொள்கைகளை வகுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர் யார் என்பதையும்;

(iii) அவ்வாறான கொள்கை உருவாக்கம் இறுதியாக எப்போது செய்யப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2009, 2010 ஆம் ஆண்டுகளில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பணம் ஒதுக்கப்பட்ட கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆகியவற்றை ஆண்டுவாரியாகவும் நிறுவனவாரியாகவும்;

(ii) 2009, 2010 ஆம் ஆண்டுகளில் செஸ் வரிக்கு மீள் நிதியளிப்பதற்குப் பதிலாக அரசாங்கம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கிய பணத்தின் அளவை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0957/ '10

2.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் கொடமக சந்தியிலிருந்து வெல்தொட்ட வரையிலான வீதி பல வருடங்களாக திருத்தப்படாமையின் காரணத்தால் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீதி எந்த நிறுவனத்திற்கு சொந்தமானதென்பதையும்,

(ii) இவ்வீதியை போக்குவரத்திற்கு பொருத்தமான விதத்தில் திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், இப்பணிகளை எப்போது ஆரம்பித்து எப்போது பூர்த்திசெய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இப்பாதையை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இப்பணத்தொகை ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1257/ '11

3.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1318/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி முகத்திடலில் அமைந்துள்ள இலங்கை இராணுவ தலைமையகம் தற்போது அந்த இடத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்கான காரணம் என்ன என்பதையும்;

(iii) தற்போது இராணுவத் தலைமையகம் எந்த இடத்தில் இயங்கி வருகின்றது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இராணுவ தலைமையக பணிகளுக்காக வாடகை அடிப்படையில் கட்டிடங்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்த இடங்கள் எவை என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு இடத்தினதும் உரிமையாளர்களின் பெயர்கள் முகவரிகள் மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1435/ '11

5.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்களையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0765/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மிஹின் எயாரின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, அதன் ஆரம்ப மூலதனம் மற்றும் இற்றைவரை முதலீடு செய்யப்பட்ட மொத்த மூலதனம் ஆகியவற்றையும்;

(ii) வரவு—செலவுத் திட்டங்களின் மூலம் மிஹின் எயாருக்கு வழங்கப்பட்ட பணத்தொகை மற்றும் அது ஒதுக்கப்பட்ட திகதியையும்;

(iii) மிஹின் எயாரின் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்ட பணத்தொகை மற்றும் அது நடைபெற்ற திகதியையும்;

(iv) கடன்கள் என்ற வகையில் வழங்கப்பட்ட மூலதனத் தொகை மற்றும் கடன்கள் வழங்கப்பட்ட திகதியுடன் அவற்றை வழங்கிய வங்கிகளின் பெயர்களையும்;

(v) வருடவரியான கடன் மீள்செலுத்தல் தொகையையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) இற்றைவரை மிஹின் எயார் மூலம் ஏற்றிச் செல்லப்பட்ட பயணிகளின் மொத்த எண்ணிக்கை மற்றும் பண்டங்களின் தொன் அளவு ஆகியவற்றை வருடவாரியாகவும்;

(ii) இற்றைவரையான மொத்த வருமானத்தை வருடவாரியாகவும்;

(iii) மிஹின் எயாரை இலாபகரமாக நடாத்துவதற்குத் தேவைப்படும் காவுசுமையின் அளவையும்;

(iv) இன்றுள்ளவாறு எய்தப்பட்ட காவு சுமையின் அளவையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரசாங்கம் ஏதாவது வங்கி உத்தரவாதத்தை மிஹின் எயாருக்கு வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவற்றின் பெறுமதிகளையும் அவை வழங்கப்பட்ட நோக்கங்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1258/ '11

7.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக மின்வலு, எரிசக்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1276/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) காலி மாவட்டத்தில் ஹிக்கடுவ பஸ் தரிப்பு நிலையத்தின் கூரை மற்றும் உபகரணங்கள் அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

(ii) இந்நிலைமையானது ஹிக்கடுவ பிரதேசத்தில் பேணிவரப்படுகின்ற உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலின்பால் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்திழுப்பதற்கு தடையாக அமைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் தரிப்பு நிலையத்தை புனரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பஸ் தரிப்பு நிலையத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் எத்திகதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1343/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகரகம நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தலவத்துகொட நகரில் நிர்மாணிக்கப்படும் பசுமைப் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலுக்காக ஒதுக்கப்பட்ட காணியின் பரப்பளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், இன்றளவில் மேற்படி நிலம் எந்த நடவடிக்கைக்காக பயன்படுத்தப் படுகிறதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) விளையாட்டுத் திடல் மற்றும் பசுமைப் பூங்காவிற்கு ஒதுக்கிய காணி பிரிதொரு தேவைக்காக பயன்படுத்தப்படுமாயின் பசுமைப் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலுக்காக ஒதுக்கிய பணத் தொகை எதற்காக பயன்படுத்தப்பட்டதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1436/ '11

10.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரதம அமைச்சரின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1064/ ’11

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதித் திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009, 2010, 2011 இற்றைவரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், மானியங்களை தனித்தனியாகவும் மொத்தமாகவும் எவ்வளவு என்பதையும்;

(ii) மேலே கூறப்பட்டவாறு பெறப்பட்ட கடன்கள் மானியங்கள் எக் கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பெறப்பட்ட கடன்களின்,

(i) அனைத்தும் உள்ளடங்கிய சராசரி வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) கடன் காலப்பகுதியின் முடிவில் மொத்த வட்டி மற்றும் கடன் கட்டணம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1284/ ’11

12.

கௌரவ புத்திக்க பத்திரன,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை - கொழும்பு கடுகதி நெடுஞ்சாலையில் மாத்தறை புகுவழியான கொடகமவை சிறு நகரமாக அபிவிருத்திசெய்யும் திட்டம் ஏதும் உள்ளதா;

(ii) அவ்வாறெனின் அதற்காக சுவீகரிக்கப்படவுள்ள காணியின் பரப்பளவு எவ்வளவு;

(iii) அந்த சொத்துக்களுக்காக நட்டஈடுகள் செலுத்தப்படுமா;

(iv) நட்டஈடு பணமாக வழங்கப்படுவதாக இருப்பின், ஒரு பர்ச்சஸுக்கு செலுத்தப்படும் தொகை எவ்வளவு;

(v) சுவீகரிக்கப்பட்ட வீடுகள் மற்றும் காணிகளுக்காக புதிய வீடுகள் மற்றும் காணிகள் வழங்கப்படுவதாக இருப்பின், அவற்றை அந்த பிரதேசத்தில் உருவாகின்ற அபிவிருத்தியின் பயன்களை இலகுவாக பெறக்கூடிய இடங்களில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா;

(vi) தற்போது காணிகள் மற்றும் வீடுகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்கள் எவை;

(vii) அந்தக் காணிகள் மற்றும் வீடுகளை குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்கும் கால வரையரை யாது

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1437/ ’11

13.

கௌரவ அஜித் குமார,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவை;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவை ;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1591/ '11

14.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தில் அகலவத்த கமநல சேவைகள் ஆளுகைப் பிரதேசத்திற்குரிய, அகலவத்த பதுரலிய பிரதான வீதியின் இருமருங்கிலும் உள்ள பல வயற்காணிகள் நிரப்பப்படுகின்றமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் இருமருங்கிலும் நிரப்பப்பட்ட பின்னர் கட்டடங்களை அமைப்பதற்கு தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள வயற்காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) இதற்கு அங்கீகாரம் வழங்கியவர்கள் யாவரென்பதையும்;

(iii) 2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, கமநல சேவைகள் சட்டத்தை மீறும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற, மேற்படி வயல்கள் நிரப்பப்படு கின்றமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1618/ '11

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 மே மாதம் முதல் இன்றுவரை நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சர்/பிரதி அமைச்சர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்தினதும் நோக்கம் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் யாவை;

(iv) ஒவ்வொரு விஜயத்தின்போதிலும் பங்கேற்ற உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிரத்தியேக பணியாட்டொகுதி உத்தியோகத்தர்கள் யாவர்;

(v) மேற்படி பங்கேற்றவர்கள் ஒவ்வொரு விஜயத்தின்போது பிரயாணம் செய்த விமான வகுப்பு மற்றும் அதற்காக செலவழித்த பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி விஜயங்களுக்காக செலவழிக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சட்டவாக்க நிலையியற் குழு (இல.1),— 46 அ (3)(ஆ) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2011 செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி கௌரவ சபாநாயகரினால் சட்டவாக்க நிலையியற் குழு "பீ" இற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, மேல் மாகாண விவசாயச் சேவை அதிகாரசபையின் வரைவு நியதிச் சட்டம் மீதான அறிக்கையை பாரளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான கால எல்லை 2011, நவெம்பர் மாதம் 30 ஆம் திகதிவரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சட்டவாக்க நிலையியற் குழு (இல.2),— 46 அ (3)(ஆ) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2011 செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி கௌரவ சபாநாயகரினால் சட்டவாக்க நிலையியற் குழு "பீ" இற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, மேல் மாகாணத்தின் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் வரைவு நியதிச் சட்டம் மீதான அறிக்கையை பாரளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான கால எல்லை 2011, நவெம்பர் மாதம் 30 ஆம் திகதிவரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூலை 11 ஆம் திகதிய 1714/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூலை 11 ஆம் திகதிய 1714/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஓகத்து 12 ஆம் திகதிய 1718/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஓகத்து 12 ஆம் திகதிய 1718/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

கமநல அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நொத்தாரிசுகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஆவணங்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 12.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

24.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

தெஹிவளை நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரீசலனை.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**